සියලු ම හිමිකම් ඇවිරිණි /
முழுப் பதிப்புரிமையுடையது /
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

சபரகமுவ மாகாண சபையின் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகள் மற்றும் ஆங்கிலம் தொடர்பான இரண்டு வருட டிப்ளோமாதாரிகள் (சிங்களம் / தமிழ் மொழி மூலம்) ஆட்சேர்த்தல் போட்டிப் பரீட்சை - 2017 (2018)

Competitive Examination for Recruitment of Graduates / Diploma (Two Year) Holders in English (Sinhala / Tamil Medium) to Fulfil the existing Vacancies in Schools Under the Sabaragamuwa Provincial Council - 2017 (2018)

For More Past Papers
**tamilguru.lk**


**(02) பொது அறிவு**
General Knowledge

ஒரு மணித்தியாலம்
One hour

### பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்

**மிக முக்கியம் :**

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



✳ விடை எழுதும்போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.

1 2 3 4

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.

.....................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
நோக்குநரின் முதலெழுத்தொப்பம்

**முக்கியம்:**

✳ இவ்வினாத்தாள் **06** பக்கங்களில் **50** வினாக்களைக் கொண்டுள்ளது.

✳ விடைகளை எழுத முன் வினாத்தாளைப் பக்க ஒழுங்கிற்கேற்ப ஒழுங்குபடுத்துக.

✳ எல்லா வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.

✳ இவ்வினாத்தாளுக்குரிய நேரம் ஒரு மணித்தியாலம் ஆகும்.

✳ மண்டப மேற்பார்வையாளரின் அறிவித்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.

✳ **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டா.**

✳ விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்

✳ கறுப்பு அல்லது நீல நிறப் பேனையினால் மாத்திரம் தெளிவாக விடைகளை எழுதுக. பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.

✳ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (photocopy) எடுத்தல் என்பன குற்றங்களாகும்.

✳ **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கை எழுத்துகள், அழிக்கும் வெண் மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டா.**

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 9 | |
| 3 | 10 - 17 | |
| 4 | 18 - 26 | |
| 5 | 27 - 36 | |
| 6 | 37 - 50 | |
| மொத்தம் | | |

**இறுதிப்புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

[பக். 2 ஐப் பார்க்க

- **1** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து அத்தெரிவின் **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

tamilguru.lk

1. 2014 இலங்கை ஆசிரியர் சேவைச் சட்டக்கோவையின் படி ஆசிரியர் தொழிலுக்குச் சேர்த்துக் கொள்ளுவதற்கு தகுதி பெறும் வயது எல்லை யாது?
   (1) 18 – 35 வருடங்கள் (2) 20 –36 வருடங்கள்
   (3) 21 – 40 வருடங்கள் (4) 24 – 40 வருடங்கள் (.........)

tamilguru.lk

2. 1978 இன் பின்னர் இலங்கையின் கல்வியோடு தொடர்பான சகல நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் விவகாரங்களை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பான சுயாதீன ஆணைக்குழு யாது?
   (1) தேசிய கல்வி ஆணைக்குழு (2) உயர் கல்வி ஆணைக்குழு
   (3) பகிரங்க சேவை ஆணைக்குழு (4) கல்வி சேவைகள் ஆணைக்குழு (.........)

3. இலங்கையிலும் நினைவுகூரப்படும் உலக ஆசிரியர் தினம் வருடத்தில் எத்தினத்தில் இடம்பெறுகின்றது?
   (1) ஒக்டோபர் 1 (2) செப்டம்பர் 17 (3) ஒக்டோபர் 6 (4) மார்ச் 8 (.........)

4. 1994 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆசிரியர் தொழிலில் இடம்பெற்ற முக்கிய நிலைமாற்றம் யாது?
   (1) ஆசிரியர் தொழிலுக்கு நிரந்தர சம்பள முறைமையொன்று வகுக்கப்பட்டமை
   (2) இலங்கை ஆசிரியர் சேவை தாபிக்கப்பட்டமை
   (3) ஆசிரியர் சேவையோடு தொடர்பான தொழிற்சங்கங்கள் தாபிக்கப்பட்டமை
   (4) தனிப்பட்ட சேவைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டமை (.........)

5. சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் இலங்கையின் பாடசாலைகளைப் பிரபலமானவை, பிரபலமற்றவை, கஷ்டமானவை என்று எக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக வகுக்கப்பட்டுள்ளன?
   (1) பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளுவதற்கு
   (2) பாடசாலைச் சீருடையைப் பகிர்ந்தளிப்பதற்கு
   (3) பிள்ளை நேயப் பாடசாலைகள் அபிவிருத்திக்கு
   (4) தேசிய ஆசிரியர் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு (.........)

For More Past Papers
tamilguru.lk

6. பின்வருவனவற்றுள் இலங்கையின் ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர்களிடம் தற்காலத்தில் தெளிவாக தென்படும் போக்கு எது?
   (1) பல்வேறு கல்வித் தகைமைகளை உடையோர் பிரதிநிதித்துவமாதல்.
   (2) மிகக் கூடிய பெண்களின் சதவீதம் பிரதிநிதித்துவமாதல்.
   (3) முன் சேவைப் பயிற்சியற்ற அதிக எண்ணிக்கையினர் பிரதிநிதித்துவமாதல்.
   (4) பல்வேறு மொழி ஊடகங்களினால் கற்பிக்கக்கூடிய அதிக எண்ணிக்கையினர் பிரதிநிதித்துவமாதல். (.........)

7. பாடசாலையொன்றின் 'நோக்கு' மற்றும் 'பணி' என்பவற்றுகிடையிலான வேறுபாடு யாது?
   (1) நோக்கு அதிபரின் கடமையாவதுடன் பணி ஆசிரியரின் கடமையாகும்.
   (2) நோக்கு ஆசிரியர் குழாத்தினரின் இலக்காவதுடன் பணி மாணவர்களின் இலக்கு ஆகும்.
   (3) நோக்கு எதிர்காலத்தில் அடையக்கூடிய நிலையாவதுடன் பணி பாடசாலையின் வேலைகளின் திட்டமாகும்.
   (4) நோக்கு பாடசாலை பற்றிச் சமூகம் நோக்கும் விதமாவதுடன் பணி உண்மையான செயன்முறையாகும். (.........)

8. கற்பித்தல் செயன்முறைக்கு மிகவும் பொருத்தமான மூலாதாரம் யாது?
   (1) மாதிரி விடைத்தாள்கள் (2) ஆசிரியர் வழிகாட்டல் கையேடு
   (3) சம்பந்தப்பட்ட பாடநூல்கள் (4) பாடத்திட்டம் (.........)

9. தற்காலத்தில் உத்தியோகபூர்வமாக நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளின் வகைப்படுத்தல் யாது?
   (1) ஆரம்ப, கனிஷ்ட இடைநிலை, சிரேஷ்ட இடைநிலை, மற்றும் தேசிய பாடசாலைகள்
   (2) கிராம, தோட்ட, புற நகர மற்றும் 1 AB பாடசாலைகள்
   (3) 1 AB, 1 C, இரண்டாம் வகை மற்றும் மூன்றாம் வகைப் பாடசாலைகள்
   (4) நகர, பிரபலமான, கஷ்டமான மற்றும் அதிகஷ்டமான பாடசாலைகள் (.........)

சுட்டெண் :.........................

0027

10. பாடசாலையொன்றில் இடம்பெறும் பெரும்பாலான விடயங்களை உள்ளடக்கும் கலைத்திட்டத் தொகுதி யாது?
   (1) நல்லொழுக்க கலைத்திட்டம், அறிவுசார் கலைத்திட்டம், கல்விக் கலைத்திட்டம்
   (2) மறைக் கலைத்திட்டம் இணைப்பாடவிதானச் செயற்பாடு, பாடப்புறச் செயற்பாடு
   (3) கல்விக் கலைத்திட்டம், பாடப்புறச் செயற்பாடு, அறிவுசார் கலைத்திட்டம்
   (4) நல்லொழுக்கக் கலைத்திட்டம், அறிவுசார் கலைத்திட்டம் இணைப்பாடவிதானச் செயற்பாடு (.........)

11. இலங்கையின் வரிசைமுறைசார் கல்வி அமைச்சுக்கும் பாடசாலைக்குமிடையில் செயற்படும் நிர்வாக மட்டங்கள் நான்கினை முறையே குறிப்பிடும் தெரிவு யாது?
   (1) மாகாணத் திணைக்களம், மாகாண அமைச்சு, வலயப் பணிமனை, கோட்டப் பணிமனை
   (2) மாகாண அமைச்சு, மாகாணத் திணைக்களம், வலயப் பணிமனை, கோட்டப் பணிமனை
   (3) கல்வித் திணைக்களம், மாகாண அமைச்சு, கோட்டப் பணிமனை, பாடசாலை முகாமைத்துவச் சபை
   (4) மாகாண அமைச்சு, மாகாணத் திணைக்களம், கொத்தணிப் பணிமனை, கோட்டப் பணிமனை (.........)

12. தற்கால இலங்கையில் நிகழ்ந்துள்ள மாற்றங்களுக்கமைய கட்டாயக் கல்வி வயதெல்லை யாது?
   (1) 5 – 18 வருடங்கள்
   (2) 5 – 14 வருடங்கள்
   (3) 6 – 18 வருடங்கள்
   (4) 5 – 16 வருடங்கள் (.........)

13. அரசாங்கப் பாடசாலைகளில் கனிஷ்ட இடைநிலைக் கட்டத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள வகுப்புகள் யாவை?
   (1) 6, 7, 8 ஆம் வகுப்புகள்
   (2) 5, 6, 7 ஆம் வகுப்புகள்
   (3) 8, 9, 10 ஆம் வகுப்புகள்
   (4) 9, 10, 11 ஆம் வகுப்புகள் (.........)

tamilguru.lk

14. அனைவருக்கும் இரு மொழிக் கல்வி என ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படுவது யாது?
   (1) சிங்களமும் தமிழும் கற்பித்தல்
   (2) சிங்களம் அல்லது தமிழுடன் ஆங்கிலம் கற்பித்தல்
   (3) தாய்மொழியையும் விரும்பிய மொழியொன்றையும் கற்பித்தல்
   (4) சிங்களத்துடன் ஆங்கிலத்தை கற்பித்தல் (.........)

15. இலங்கையில் இலவசக் கல்வியோடு தொடர்பான கட்டங்கள் எனப்படுபவை எவை?
   (1) ஆரம்பக் கல்வியிலிருந்து இடைநிலைக் கல்வி வரை
   (2) பாடசாலைக் கல்வியும் தொழில் கல்வியும்
   (3) முதலாம் வகுப்பிலிருந்து பல்கலைக்கழக முதல் பட்டக் கல்வி வரை
   (4) ஆரம்ப கல்வியும் மூன்றாம் நிலைக் கல்வியும் (.........)

For More Past Papers
tamilguru.lk

16. முதலாம் வகுப்புக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் அடிப்படைகளில் கூடுதலான சதவீதத்தையுடையது எது?
   (1) பிரதேசத்தில் வதிவிடம் மற்றும் பெற்றோராக இருக்கும் பழைய மாணவர் அடிப்படை
   (2) வதிவிடம் மற்றும் பாதுகாப்புச் சேவைகளில் ஈடுபடும் அடிப்படை
   (3) கல்வி நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுதல் மற்றும் சகோதர மாணவர் அடிப்படை
   (4) வெளிநாடு சென்று திரும்பி வந்துள்ளோரின் பிள்ளைகள் மற்றும் வதிவிடம் (.........)

17. ஒக்டோபர் மாதத்தைத் தேசிய வாசிப்பு மாதம் எனப் பெயரிட்ட நிறுவகம் யாது?
   (1) தேசிய கல்வி நிறுவகம்
   (2) தேசிய நூலக ஆவணப்படுத்தல் சேவைகள் சபை
   (3) தேசிய கல்விச் சேவைகள் ஆணைக்குழு
   (4) சர்வதேச சிறுவர் நிதியம் (.........)

/பக். 4 ஐப் பார்க்க

18. இலங்கையின் பாடசாலையொன்றில் நடைமுறையிலுள்ள பதவிகளை ஏறுவரிசைப்படி குறிப்பிடும் தெரிவு யாது?
    (1) பகுதித் தலைவர், பாட இணைப்பாளர், வகுப்புகளின் தலைவர், வகுப்பாசிரியர்
    (2) வகுப்புகளின் தலைவர், வகுப்பாசிரியர், பாடப்பொறுப்பாசிரியர், பிரதி அதிபர்
    (3) பாடப்பொறுப்பாசிரியர், வகுப்பாசிரியர், உதவி அதிபர், பகுதிப்பொறுப்பாசிரியர்
    (4) வகுப்பாசிரியர், பாட இணைப்பாளர், பகுதிப்பொறுப்பாசிரியர், பிரதி அதிபர் (.........)

For More Past Papers
tamilguru.lk

19. பின்வருவனவற்றுள் அரசாங்கப் பாடசாலைகளில் உத்தியோகபூர்வமாகச் சேவை புரியும் அதிபர்கள் எந்த சேவைக்கு உரியவர்கள்?
    (1) ஆசிரியர் ஆலோசகர் சேவை (2) ஆசிரியர் கல்வியாளர் சேவை
    (3) கல்வி நிர்வாக சேவை (4) பொது நிர்வாக சேவை (.........)

20. தற்போது இலங்கை பல்கலைக்கழகங்கள் எந்த அமைச்சைச் சேர்ந்தனவாகும்?
    (1) உயர் கல்வி அமைச்சு
    (2) கலாசார அலுவல்கள் அமைச்சு
    (3) விஞ்ஞானம் மற்றும் தொழினுட்ப அமைச்சு
    (4) சமய விவகாரங்கள் அமைச்சு (.........)

tamilguru.lk

21. இலங்கையில் கல்வியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் தீர்மானிக்கும் பிரதான நிறுவகம் யாது?
    (1) தேசிய கல்வி நிறுவகம் (2) கல்வி அமைச்சு
    (3) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (4) தேசிய கல்வி ஆணைக்குழு (.........)

22. ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையின் பிரதான நோக்கங்கள் யாவை?
    (1) சிறந்த மாணவர்களைத் தெரிவுசெய்து பரிசில்கள் வழங்குதலும் புலமைப் பரிசில் வழங்குதலும்
    (2) சிறந்த பாடசாலைகளைப் பெற்றுக்கொள்ளுதலும் பாடசாலையின் நற்பெயரைப் பாதுகாத்தலும்
    (3) உதவிப்பணம் வழங்குதலும் பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்தலும்
    (4) எதிர்காலக் கல்விக்கான தளத்தை வகுத்தலும் மாணவர்களை ஊக்குவித்தலும் (.........)

23. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் 3 பாடங்களை அடிப்படையாகக் கொண்ட பரீட்சை முதல்முறையாக நடத்தப்பட்ட வருடம் எது?
    (1) 2000 (2) 2001 (3) 2002 (4) 2004 (.........)

24. பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாகச் செயற்படுவதற்குத் தற்காலத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள எண்ணக்கரு யாது?
    (1) பிள்ளை நேயப் பாடசாலை
    (2) அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை
    (3) நவோதயா பாடசாலை
    (4) சிறந்த இடைநிலைப் பாடசாலை (.........)

25. குறித்த நாடொன்றின் கல்வி மட்டத்தை மதிப்பிடுவதற்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் பிரபலமான சுட்டி யாது?
    (1) சனத்தொகைக்கு சார்பளவில் பாடசாலைகளுள்ள அளவு
    (2) ஆசிரியர் தொழிலுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் அளவு
    (3) எழுத்தறிவு ஆற்றல்
    (4) தேசியப் பரீட்சைகளில் சித்தியடையும் சதவீதம் (.........)

26. இலங்கையில் முறைசார் கல்விக்குட்படும் கல்விச் சந்தர்ப்பங்களைச் சரியாக உள்ளடக்கும் தெரிவு யாது?
    (1) பிள்ளைக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி
    (2) ஆரம்பக் கல்வி, கனிஷ்ட இடைநிலைக் கல்வி, சிரேஷ்ட இடைநிலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி
    (3) முதல்நிலைக் கல்வி, இடைநிலைக் கல்வி, மூன்றாம் நிலைக் கல்வி, தொடர்ச்சியான கல்வி
    (4) முதல்நிலைக் கல்வி, ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, தொழிற்கல்வி (.........)

/பக். 5 ஐப் பார்க்க

For More Past Papers
tamilguru.lk

27. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்காகத் தற்காலத்தில் தேசிய மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யாது?
   (1) தொழில்நுட்ப கல்லூரிகளில் பயிற்சி வழங்குதல்
   (2) இளைஞர் படையில் சேர்த்துக் கொள்ளல்
   (3) மேலும் இரு வருடங்கள் பாடசாலைக் கல்வியை வழங்குதல்
   (4) தனியார் கல்வி நிறுவனங்களை ஆரம்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் (.........)

28. பின்வருவனவற்றுள் தற்போதைய பாடசாலை முறைமையில் நிகழுகின்ற தெளிவாக தென்படும் போக்கு எது?
   (1) சகல பரீட்சைகளிலும் சித்தியடையாதோரின் சதவீதம் அதிகரித்துச் செல்லுதல்
   (2) பாடசாலையிலிருந்து இடை விலகுவோரின் சதவீதம் குறைந்து செல்லுதல்
   (3) கேள்விக்கேற்ப போதியளவு புதிய பாடசாலைகள் திறக்கப்படுதல்
   (4) நாளாந்தம் பாடசாலைக்கு வருகை தராதோரின் சதவீதம் அதிகரித்துச் செல்லுதல் (.........)

29. உலக அளவுகோலுக்கேற்ப இலங்கைப் பல்கலைக்கழகங்களுள் முதன்மை இடத்தைப் பெற்றுள்ள பல்கலைக்கழகம் யாது?
   (1) பேராதனைப் பல்கலைக்கழகம்
   (2) மொரட்டுவ பல்கலைக்கழகம்
   (3) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
   (4) கொழும்பு பல்கலைக்கழகம் (.........)

30. பாடசாலையொன்றை முன்னேற்றுவதற்குச் சமூகத்தைத் தொடர்புபடுத்திக் கொண்டு பெரும்பாலான பாடசாலைகளில் தாபிக்கப்பட்டுள்ள பரந்த ஒழுங்கமைப்பு யாது?
   (1) பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
   (2) பாடசாலை நலன்புரிச் சங்கம்
   (3) பெற்றோர் ஆசிரியர் சங்கம்
   (4) பாடசாலை அபிவிருத்திச் சபை (.........)

● **31** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய **சரியான விடையைத்** தரப்பட்டுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

31. 1978 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பின் 13ம் திருத்தத்தின்படி முன்பள்ளி கல்வி வழங்குதல் எந்த நிறுவனத்திற்குரியதாகும்?

.................................................................................................................................

32. உறுப்பு நாடுகளின் கல்வியோடு தொடர்பான கொள்கைகள், கலைத்திட்ட அபிவிருத்திக்கான வழிகாட்டல் மற்றும் உதவிகள் என்பவற்றை மேற்கொள்ளும் உலக நிறுவனத்தின் பெயர் யாது?

.................................................................................................................................

33. தற்போது கல்வி அமைச்சின் அறிக்கைகளின்படி வருடாந்தம் பாடசாலைக் கல்வியின் எப்பிரிவில் அதிக ஆசிரியர் வெற்றிடம் இடம்பெறுகின்றது?

.................................................................................................................................

34. கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் சித்தியடைந்த மாணவர்களை ஆசிரியர் தொழிலுக்குச் சேர்த்துக் கொள்வதற்கு பயிற்சியளிப்பதற்காகத் தாபிக்கப்பட்டுள்ள கல்வி நிறுவகங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

.................................................................................................................................

35. பட்டதாரிகள் ஆசிரியர் தொழிலுக்கு வந்ததன் பின்னர் வாண்மை அபிவிருத்திக்காக முதலில் கற்க வேண்டிய பட்டப் பாடநெறி யாது?

.................................................................................................................................

36. வரிசை முறைசார் கல்வி அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன?

.................................................................................................................................

[பக். 6 ஐப் பார்க்க

37. கடந்த ஆண்டு முடிவடையும் போது இலங்கையின் அரசாங்கப் பாடசாலைகளில் இருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவாகும்?

..............................................................................................................................................

38. இலவசக் கல்வியின் தந்தை என இலங்கை மக்கள் யாரை அழைக்கின்றனர்?

..............................................................................................................................................

39. உயர் எழுத்தறிவு வீதம் நிலவும் சார்க் பிராந்திய நாட்டின் பெயரைக் குறிப்பிடுக.

..............................................................................................................................................

40. இலங்கையில் முதலாம் வகுப்புக்கு வருடாந்தம் நுழையும் மாணவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவு?

..............................................................................................................................................

41. கல்வியைப் பெற்றுக்கொள்வதற்குச் சகலருக்கும் சமமான உரிமை உண்டு என்பதை 1948 இல் உறுதிப்படுத்திய பிரகடனத்தின் பெயர் என்ன?

..............................................................................................................................................

42. இலங்கையில் பாடசாலைக் கலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காகச் செயற்படும் பிரதான நிறுவகம் யாது?

..............................................................................................................................................

43. கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களின் மேலதிக அறிவை மதிப்பிடுவதற்கு 2000 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகம் செய்யப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் என்ன?

..............................................................................................................................................

44. தற்கால இலங்கையில் தேசியக் கொள்கையொன்று என்ற வகையில் பல்கலைக்கழக மாணவர்களின் நலனோம்பலுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவி வகையொன்றின் பெயர் குறிப்பிடுக.

tamilguru.lk

..............................................................................................................................................

45. அண்மைக் காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரத் தொழில்நுட்பப் பாடநெறியில் இடம்பெறும் பிரதான பாடப் பரப்பொன்றின் பெயர் குறிப்பிடுக.

..............................................................................................................................................

46. இலங்கையில் பாடசாலை மாணவர்களின் சுகாதாரம் தொடர்பாக எழுந்துள்ள பிரதான போக்கு யாது?

..............................................................................................................................................

47. பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக அண்மைக் காலத்தில் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட காப்புறுதி முறைமை எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

..............................................................................................................................................

48. இலங்கையில் கல்வி நவீனமயமாக்கலை அறிமுகம் செய்யும் பொறுப்பினைப் பெற்றுள்ள நிறுவகம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

..............................................................................................................................................

49. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் சித்தியடையாத மாணவர்களை தொடர்ந்தும் பாடசாலையோடு தொடர்புபடுத்திக் கொள்வதற்கு நடைமுறையிலுள்ள வேலைத்திட்டம் எப்பெயரால் அழைக்கப்படுகிறது?

..............................................................................................................................................

50. இலங்கையின் கல்வி அபிவிருத்தியினை ஏற்படுத்தும் பொருட்டு உதவி வழங்கும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் முகவர் நிறுவகத்தின் பெயர் யாது?

..............................................................................................................................................

* * *

tamilguru.lk